LouisSaveinDupuisJournalofMultidisciplinaryResearch2024,3: 19-25 Doi.: 10.21839/lsdjmr.2024.v3.134

**Research Article**

# குறுந்தொகையில்காணலாகும்இயற்கைவர்ணனை

**சி . அபிதா பி.எச்.டி.,**
**இளங்கலைத்தமிழ், மூன்றாம்ஆண்டு**
**இமாக்குலேட்மகளிர்கல்லூரி, கடலூர்.**
**கைபேசிஎண் : 70103 17554**
**Email: abithasivalingam21@gmail.com**

**முனைவர்வீ. விஜியலட்சுமி**
**ஏம்.எ., எம்.எட்., எம்.பில்.,**
**உதவிப்பேராசிரியர்,**
**தமிழ்த்துறை**
**இமாக்குலேட்மகளிர்கல்லூரி,**
**கடலூர்**
**கைபேசிஎண் : 86084 03933**

**ஆய்வுச்சுருக்கம்**

பண்டையதமிழர்களின்மாபெரும்படைப்பானசங்கஇலக்கியங்களானஎட்டுத் தொகையில்அமையும்அகப்பாடல்களில்மிகச்சிறந்ததுகுறுந்தொகைஆகும். உவமையின்றிஉணர்ச்சியாய்அமையும்பாடல்களும்உவமையுடனும்பலபாடல்களில் வாழ்வியல்உண்மைகளைநெஞ்சுபதியும்வகையில்இலக்கியங்கள்எடுத்துக் கூறுகின்றன.இவ்இலக்கியங்களில்அமைந்துள்ளதலைவன்தலைவியின்களவுவாழ்க் கையினைஇயற்கைநிகழ்வுகளோடுஎடுத்துரைக்கும்வரிகள்வர்ணனையோடு அமைகின்றன.செம்மண்ணில்கலந்தநீர்போலஅன்புடையநெஞ்சங்கள்ஒன்றிணைந்து காணப்படுகின்றனஎன்பதுபோன்றகருத்துக்கள்பாமரர்களையும்தன்பால்ஈர்க்கும் வண்ணம்அமைகின்றன.குறுந்தொகைகூறும்இயற்கையும்வாழ்வியலும்என்றஇவ்வாழ் வானதுபழந்தமிழர்களின்வாழ்வியல்முறைஇயற்கையோடுஇயைந்தாகவாழ்ந்துள்ளன ர்என்பதனைஎடுத்துரைக்கின்றன.

**திறவுசொற்கள்:** இயற்கையின்எழில், வாழ்வியல்முறை, வெறியாட்டுமரபு, தலைவன் தலைவிபண்பு, தமிழர்களின்பண்பாடு, தொழிலின்சிறப்பு, நிமித்தங்கள், புனைவுகள்.

## முன்னுரை

தமிழ்மக்களுக்குஇயற்கையில்இருந்தஈடுபாடும், இயற்கையைச்செய்யுளுக்குப்பின்னணியாகஅமைக்கும்முறையும்வியப்பைத்தருகின்றன. சங்கஇலக்கியத்தின்மூலம்தமிழரின்இயற்கைஈடுபாட்டைஆழமாகஉணர்ந்து கொள்ளமுடிகின்றது.

தொல்காப்பியப்பொருளதிகாரம்இயற்கையைப்புலனெறிவழக்கிற்குஅமைத்து இருக்கின்றது.

ஐந்திணைக்குப்பண்டைத்தமிழர்கள் கொடுத்தபெயர்கள்மூலம்அவர்கள்இயற்கையோடுஇணைந்துவாழ்ந்ததைஅறிந்துகொள்ளமுடிகின்றதுஎன்றசெய்தியினைவிளக்கும்வண்ணபாகஇவ்வாய்வுக் கட்டுரைஅமைகின்றது.

**இறைவழிபாடு**

இறைவனின்திருவருளைப்பெற, வழிபாட்டினைநெஞ்சாரச்செய்தல்வேண்டுமென்பதுபொதுவானதொருவிதி "வாழ்க்கையின் முதலும் முடிவும் கடவுளைச் சார்ந்தவை என்று தெரிந்து

கொண்டு,

அவ்வழியில்சிந்தையைச்செலுத்தலே

வழிபாடு" 1 என்பர் மு. வரதராசனார் எடுத்துரைக்கின்றார்.

கடவுள்எங்கும்உள்ளபெருஞ்சக்தியாய்எல்லாப்பொருளுமாய்எல்லாஉயிருமாய்விளங்குதலைஎண்ணவேண்டும்.

**"நெஞ்சகமேகோயில்நினைவேசுகந்தம்அனபே**

**மஞ்சனநீர்பூசைகொள்ளவாராய்பராபரமே"** [2]

**பராக்கண்ணி, பா. 155**

என்றுதாயுமானவரும்.

**"அன்பெனும்பீடியுள்அகப்படும்**

**மலையே**

**அன்பெனும்குடில்புகும்அரசே" 03**

**திருவருட்பா. பா. 3269**

என்று இராமலிங்கரும்.

**"உள்ளமும்புறமும்நினைப்பரின்நின்னுள்ளே**

**மொள்ளாஅமுதாம்என்ன்ற) உந்திபற**

**முளையாதுபந்தம்என்று(கடலூர்) உந்திபற" 4**

**திருவுந்தியார்தெளி, பா. 23**

எனமுத்துக்குமாரசாமித்தம்பிரானும்வழிபாட்டின்பெருமையைஉணர்த்துகின்றார்.

தமிழர்கள்அக்காலத்திலிருந்துஇன்றுவரைஇறைவழிபாட்டில்ஆழ்ந்தஈடுபாடுஉடையவர்கள்.

வழிபாட்டில்பல்வேறுகூறுகள்கடைப்பிடிக்கப்பட்டுவந்துள்ளமையைக்குறுந்தொகையின்பாடல்வழிஅறியமுடிகிறது.

அவற்றுள்ஒன்றுவெறியாட்டு. வேலனைநினைத்துவெறியாட்டுநிகழ்த்தும்போது,

செந்நெல்பொரிகளைத்தூவிவெறியாட்டுநிகழ்த்துவதுஅன்றையமரபாகஇருந்துவந்துள்ளது. இதனை,

**"வேலன்புனைந்தவெறியயர்,**

**செந்நெல்வான்பொரிசிதறியன்ன" 5**

**குறுந். நூற்பா. 53: 1-2**

என்னும் பாடலால் அறிய முடிகிறது. மேலும், நோய் கொண்ட ஒருவரைக் குணப்படுத்தத் தெய்வத்தை

வேண்டி வழிபாடு நடத்தியதை (268, 362) பாடல்கள் உணர்த்துகின்றன.

ஆட்டுக்குட்டியைப்பலிகொடுத்து வழிபடும்வழிபாட்டுமுறையும்அக்கால த்தில்இருந்துள்ளது. இன்றையசிறுதெய்வவழிபாட்டில்பலி கொடுத்துவணங்கும்வழிபாட்டுமுறைக் குஅந்நிகழ்வுகள்வழிவிட்டிருக்கின்றனஎ ன்பதைஇதன்வழிநின்றுஆராயலாம்.

மரங்களைத்தெய்வமாகக்கருதிவ ழிபடும்மரபு, உலகில்பல்வேறுநாடுகளில்பழங்காலம் தொட்டேஇருக்கிறது. அவ்வாறேமரத்தினைத்தெய்வமாகக்கரு திவழிபட்டதை,

**“மன்றமராஅத்தபேஎம்முதீர்கடவுள்**

**கொடியேந்திஎதறூஉம்என்ப” 6 குறுந், 87-1**

என்பதுகுறுந்தொகையின்பாடல டிகளைஉணர்த்துகின்றன. இம்மரபுபின்னர்தலவிருட்சங்களைவழி படுவதற்கும், மரங்களின்அடியில்இலிங்கத்தைவைத் துவழிபடும்வழிபாட்டிற்கும்வழிவகுத்து ள்ளதுஎன்பது ,வ்வாய்வின்முடிவு.

வழிபடும்அடியவர்விரதகாலங்களில் ,றைவனின்பெயரால்தன்னைவறுத்திக் கொள்ளல்இன்றையநிலையில்உள்ளது. இம்மரபுகுறுந்தொகையில்இருந்துவந்த தே. பார்ப்பனர்கள்விரதகாலங்களில்தனிவ கையானஉணவைஉண்டனர்என்பதுமர பாகஇருந்துவந்துள்ளமையைப்

**“பார்ப்பனமகனேபார்ப்பனமகனே**

**செம்பூமுருக்கின்நல்நார்களைந்து**

**தண்டொடுபிடித்ததாழ்கமண்டலத்து ப்**

**படிவஉண்டிப்பார்ப்பனமகனே"7 குறுந், 7(1-3)**

என்றஅடிகளால்விரதகாலங்களில் படிவஉண்டிஉண்ணும்மரபுஇருந்துள்ள தைஇவ்வியல்உரைக்கிறது.

**இயற்கைப்புனைவுகள்**

இயற்கையோடுபழகி, இயற்கையழகில் ஈடுபட்டுஅவ்வியற்கையின்பலவகைக் கோலங்களைச்சொற்சித்திரங்களால்உ ருப்படுத்திககாட்டும்குறுந்தொகைப்புல வர்களுடையபேரறிவின்திறம்யாவரும் வியத்தற்குரியது.

நாடகஅரங்கில்நிகழும்நிகழ்ச்சிக் குஏற்றகளனொன்றைநாடகப்புலவன்அ மைத்துக்கொள்வதும், ஓவியப்புலவன்தான்எழுதப்புகும்ஓவியத் திற்குஏற்றநிலைக்களனைஎழுதிக்கொ ள்வதும்போன்று, பிரிவைப்புனையும்ஆசிரியன்துன்பஉ ணர்ச்சியைமிகுதிப்படுத்தவேண்டிநீரில் லாதசுரத்தையும், ஓய்ந்தயானையையும்தான்கூறும்நிகழ் ச்சிகளோடுஇயைபுப்படுத்துகின்றான்.

இன்பஉணர்ச்சியைமிகுதிப்படுத் தவேண்டித்தலைவனும்,

தலைவியும்ஒருவரையொருவர்காணும் நிகழ்ச்சியைச்சந்தனமும், சண்பகமும், தேமாவும், தீம்பலவும், ஆசினியும், அசோவனிங்கோங்கும். வேங்கையும், குரவமும்விரிந்து.

நாகமும்,திலகமும்,நறவும், நந்தியும்,மாதவியும், மல்லிகையும், மௌவலொடுமணங்காழ்ந்துபாதிரியும், பாவைஞாழலும், பைங்கொன்றையொடுபிணியவிழ்ந்து பொரிப்புன்கும், புன்னாகமும், முருக்கொடுமுகைசிறந்துவண்டறைந்து தேனார்ந்துவரிக்குயில்கள், சைபாடத்தன்டென்றல், டைவிடராய்த்தனியவரைமுனிவுசெய்யும்பொழியதுநடுவன்"8 காட்டுகிறான்.

புனைவுஎன்னும்சொல்லுக்கு, "அலங்காரம், அழகு, செழிப்பு, செய்கை. கட்டுகை, இணைப்பு, கற்பனை" 9 என்றுபலவாறாகக்கழகத்தமிழகராதி பொருள்கொள்கிறது.

இங்குப்புனைவுஎன்னும்சொல்கற்பனைமற்றும்இணைப்புஎன்னும்பொருளில்எடுத்தாளப்பட்டு, ஆசிரியர்திணையின்முதல், கரு, மற்றும்உரிப்பொருளுக்கேற்பஇயற்கைக்காட்சிகள்மீதுதம்கற்பனையைஏற்றி, தாம்கூறவரும்கருத்தோடுஇணைத்துக் காட்டும்திறம்ஆராயப்படுகிறது.

குறுந்தொகையில்ஐந்துநிலங்களின்இயல்புகளும், நிகழ்ச்சிகளும்இயற்கைப்புனைவுகளோடுபுலப்படுத்தப்படுகின்றன. அவற்றுள்நெய்தல்திணைமட்டும்தேர்ந்தெடுக்கப்பட்டநெய்தல்திணைப்பாடல்களின்இயற்கைப்புனைவுகளைவெளிப்படுத்துகிறது.

நெய்தல்நிலம்கடலும், கடல்சார்ந்தஇடம். எனவே, அவற்றில்நீர்ப்பரப்பைச்சார்ந்தவருணனைகள்காணப்படுகின்றன. தன்னிடத்தில்தங்கியிருக்கும்குருகுகள் உறங்குவதற்குக்காரணமாகிய ,னியநிழலையுடையபுன்னைமரமானது, அலைகளால்வீசப்படும்துளியால்அரும்புகின்ற, கண்ணுக்குஇனிதாகியநீர்ப்பரப்பையுடைய, மெல்லியகடற்கரையையுடையதலைவன்என்றுநெய்தல்நிலத்தலைவனின்நாட்டின்தன்மைபேசப்படுகின்றது.

**"வதிகுருகுஉறங்கும்இன்நிழற்புன்னை**

**உடைதிரைத்திவலைஅரும்பும்தீம்நீர்**

**மெல்லம்புலம்பன்பிரிந்தென**

**பல், இதழ், உண்கண்பாடுஒல்லாவே" 10 குறுந், நூற்பா,5(1-3)**

என்பதுஅப்பாடல். மாலைப்பொழுதில்தலைவி, தலைவனின்பிரிவால்வாடுவதைச்சொல்லுமிடத்துச்சூரியன்மறையும்காலத்தில்வளைந்தசிறகுகளையுடையபறவைக

ள்மராமரத்திலுள்ளகூட்டிலிருக்கும்குஞ்சுகளுக்குவாயில்செருகும்பொருட்டு, இரையைத்தம்அலகில்எடுத்துக்கொண்டுவிரைந்துசெல்லும்என்பதை,

**"ஞாயிறுபட்டஅகல்வாய்வானத்து**

**அளியதாமேகொடுஞ்சிறைப்பறவை**

**இறைஉறஓதுங்கியநெறிஅயல்மரா அத்த**

**பிள்ளைஉன்வாய்ச்செரீஇய**

**இரைகொண்டமையின்விரையுமால் செலவே" 11 குறுந், 92(1-5)**

என்றுஇயற்கைக்காட்சியின்நுட்பம்விளங்கப்புலவர்குறிப்பிடுகின்றார்.

**மழைச்செல்வம்**

காதலித்தவர்கருத்தொருமித்துநடத்தும்இல்வாழ்வின்இன்பப்பேறாம்மழலையின்பம், பெரிதாகக்கருதப்பட்டது. இதனை,

**"மங்கலம்என்பமனைமாட்சிமற்றதன்**

**நன்கலம்நன்மக்கட்பேறு" 12 குறள் 60**

என்றகுறள்மூலம்இல்லறவாழ்விற்குஅழகுச்சேர்ப்பதுகுழந்தைசெல்வம்என்கிறார். வள்ளுவரின்கருத்தினைவலியுறுத்தும்படிகுறுந்தொகையில்கருத்துக்கள்இடம்பெற்றுள்ளன.

தலைவன், தலைவியின்ஊடலைத்தீர்க்கும்வாயிலாகமழலைச்செல்வம்திகழ்கிறது. இதனை,

"கண்டிசின்பாணபண்புஉடைத்துஅம்ம" 13

என்றுமழலைச்செல்வத்தைவிடச்சிறந்தசெல்வம்எதுவுமில்லை. இல்வாழ்வின்பெறுதற்கரியசெல்வமாகமழலைச்செல்வம்கருதப்பட்டது.

**நிமித்தங்கள்:**

தமிழர்கள்அன்றிலிருந்துஇன்றுவரைசகுனம்பார்ப்பதைஒருமரபாகக்கொண்டுள்ளனர்குருகுஎன்னும்பறவைஉயர்ந்துவானத்தில்பறப்பதையும், புதர்கண்மலர்களில்வண்டுகள்ரீங்காரம்இட்டுக்கொண்டிருத்தலையும்வளைப்பொலிந்ததோள்கள்சிறிதுதடித்தலையும் நல்லசகுனமாகத்தமிழர்கொண்டுஇருந்தனர்.

தலைவனைப்பிரிந்திருக்கும்தலைவி ,ச்சகுனங்களைக்கூறித்தலைவன்விரைவில்வரஉள்ளான்என்பதைத்தோழி, தலைவிக்குஎடுத்தியம்புவதாகக்கல்லாடனார்குறுந்தொகையில் 26- ம்பாடலில்உரைக்கின்றார்.

நாம்ஒருசெயலைப்பற்றிப்பேசிக்கொண்டிருக்கையில்பல்லிசத்தமிட்டால் அச்செயல்நடைபெறும்என்பதைஇன்னும்நம்வழக்கத்தில்கொண்டுள்ளோம். இவ்வழக்கம்குறுந்தொகைகாலம்தொட்டேஇருந்துவந்துள்ளது. பல்லிசொல்லும்சொல்லால்சிலசெயல்க

ள்நடப்பதுண்டுஎன்பதைக்குறுந்தொகையில் 16-ம்பாடல்எடுத்தியம்புகிறது.

தலைவனைப்பிரிந்திருக்கும்தலைவியிடத்தில்ஆண்பல்லியானதுதன்துணையைஅழைக்கும்சத்தத்தைக்கேட்டுவிரைவில்அவர்வருவார்என்றுதோழிகூறுவதாகப்பாடலைப்பாடியபெருங்கடுக்கோஉரைக்கின்றார்.

**தொழிற்சிறப்பு:**

தன்குடும்பம்வளமோடுவாழவும், வேளாண்மைசெய்துபொருளினால்வாழ்ந்தமக்களையும்குறுந்தொகை சுட்டுகிறது.
குறவன்ஒருமுறைவிதைத்ததிணையின்கதிர்களைப்பெற்றுமகிழ்வோடு, அவற்றின்மறுகாலில்விளையும்அவரைக்காய்களையும்பெற்றுமகிழ்கின்றான்என்பதனை,

**'பெரும்புனக்குறவன்சிறுதினைமறுகால்**

**கொழுங்கொடிஅவரைபூக்கும்"** 14 **குறுந், நூற்பா. 82(4-5)**

என்றவரிகளிலிருந்துஉணரலாம். ஒருசேரவே,ரண்டுஎன்றவரிகளிலிருந்துதொழில்நுட்பச்சிறப்புஅறிந்துபயிர்செய்துவாழ்ந்தனர்என்பதைக்குறுந்தொகைவழிஇவ்வியல்பதிவுசெய்கிறது.

**பொருள்பயன்பாடு**

ஒருவன்தாளாற்றித்தந்தபொருளைப்பகுத்துண்டுவாழ்வதைத்தன்வாழ்வின்குறிக்கோளாகக்கொள்ளுதல்வேண்டும்.
தாயத்தால்வரும்செல்வத்தைப்போற்றிக்காப்பதுஒன்றேதன்கடமைஎனவும், அதனைக்குறைப்பதற்கோ, அழிப்பதற்கோஎவ்வகையிலும்தனக்குரிமைஇல்லைஎனவும்ஒருவன்அறிதல்வேண்டும்.
முன்னோர்கள்தேடித்தொகுத்தப்பொருளைத்தனக்காகப்பயன்படுத்துவானாயின்.
அவன்இறந்தவனாகவேகருதப்படுவான் என்பதனை,

**"உள்ளதுசிதைப்போர்உளர்எனப்படாஅர்**

**இல்லோர்வாழ்க்கைஇரவிலும்இளிவுஎனச்**

**சொல்லியவண்ணம்தெளியக்காட்டி"**
**15 குறுந், நூற்பா. 283(1-2)**

எனும்வரிகள்உணர்த்துகின்றன. பிறருக்குக்கொடுப்பதன்மூலமேஇல்லறவாழ்வுஇனிமைபெறும்என்பதாம்.

இவ்வாறுதன்இல்லறத்தைப்பிரிந்துப்பொருள்தேடச்சென்று, தலைவன்கொணர்ந்தப்பொருளைமகிழ்வோடும், பொறுப்போடும்உளமொத்தஅன்போடும், வாழ்வின்முழுப்பயனைஅடைதலின் பொருட்டுஇல்லறநெறிக்காகச்செலவிட்டும்விருந்தாற்றியும்மகிழ்கின்றனர்.

இதிலிருந்துஇல்வாழ்விற்குப்பொருளின்தேவைஎவ்வளவுமுக்கியமானதுஎன்பதையும், பொருளின்பயன்பாட்டினையும்அறிந்துகொள்ளகுறுந்தொகைப்பாடல்கள்சான்றாகஅமைந்துள்ளன.

மேலும், பொருளாதாரச்சிக்கனத்தையும்எதிர்காலத்திற்கும்சேமிப்புஅவசியம்என்பதைவலியுறுத்திவளமானஇல்லறவாழ்விற்குக்குறுந்தொகைப்பாடல்கள்வழிகாட்டியாகவிளங்குகின்றன.

உழைப்புஎன்பதுமனிதவாழ்வியலில்முக்கியப்பங்காற்றுகிறது. உழைப்புஇல்லாமல்எந்தச்செயலும்நடைபெறுவதில்லை. உழைக்காமல்இருந்தால், அவன்புவியில்வாழ்வதற்குமதிப்பில்லாமல்போய்விடும்.

ஒருவன்அதிகசெல்வம்வைத்திருந்தாலும், அவன்பின்வருபவன். மீண்டும்உழைப்பைநாடிசெல்வத்தைச்சேர்க்கிறான். வாழ்க்கைவாழச்செல்வம்தேவை. அதைப்பெறுவதன்பொருட்டுஉழைப்பைநாடவேண்டும்.

**முடிவுரை**

சங்கஇலக்கியங்களைக்கொண்டுபழந்தமிழர்களின்வாழ்வியல்நிலையினைஅறிந்துகொள்ளமுடிகின்றது. இயற்கையோடுஇணைந்துவாழும்தங்களின்வாழ்க்கைமுறைஎன்றும்பூர்வதன்மைகொண்டதாகவிளங்குகின்றது. மனிதனின்பெரும்வளர்ச்சிக்குஇயற்கையின்உதவிஎன்பதுஅளப்பரியதாகும். இயற்கைநல்கியபல்வேறுபயன்களைபயன்படுத்திக்கொண்டுமனிதன்தன்வாழ்வினைசிறப்பாகவாழ்ந்துள்ளான்என்பதுஎடுத்துஇயம்பப்பட்டுள்ளது.

**பார்வைநூல்**


முனைவர்நாகராசன். வி :

குறுந்தொகைமூலமும்உரையும்

(2004) பதிப்பு – 2004

நியூசெஞ்சுரிபுக்ஹவுஸ்பி. லிட்,

சென்னை – 98

சண்முகம்பிள்ளை. ம :

சங்கத்தமிழர்வாழ்வியல்

(1982) பதிப்பு – 1982

கழகவெளியீடு

சென்னை – 17

சுப்புரெட்டியார். ந :

தொல்காப்பியம்காட்டும்வாழ்க்கை

(1964) பதிப்பு – 1964

பழனியப்பாபிரதர்ஸ்

சென்னை.

விஜியலட்சுமி .வீ :

அறஇலக்கியங்களில்இல்லறம்

2021 பதிப்பு – 2021

சித்ராபதிப்பகம்

சென்னை – 24